**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
https://ngmtamil.in/
DOI: https://doi.org/10.63300/kijts04052026

*Article Type: Original Research Article*

# The special nature of the Thiruvaranga and the structure of the parable

**Dr.V.GOPALAKRISHNAN*,**

*Assistant Professor, Department of Tamil. Sona College of Arts and Science, Salem-5, Tamilnadu, India. Affliated to Periyar University, Salem, Tamil Nadu. India.*

*Orcid: https://orcid.org/0000-0002-9465-4421*

*Correspondence: rasaigopi@gmail.com,

**Received**: 22-01-2026; **Revised**: 24-01-2026; **Accepted**: 27-01-2026; **Published**: 01-02-2026

**Abstract:** The most revered place in Vaishnava shrines is the Thiruvaranga. The lying form of the Thirumal is particularly visible here. Many people worship and venerate this Thirumal in various ways. In particular, among the azhwars known as the great Vaishnava saints like Thirumangaiyazhwar and Kulasekarazhwar, Thondaradippodiyajwar also worshipped Lord Thiruvaranga. They have sung in their hymns, remembering and melting in the memory of Lord Thiruvaranga. It can also be seen that when singing in praise of Thirumalai, they have sung with great emotion, using metaphors. This study aims to investigate the historical accounts of the Thiruvaranga, its significance and organization, and the parables known in the poems of Thondaradippodiyāzhvar, in order to convey such stories to future generations.

**Keywords:** *Thiruvarangam, Thiruvaranganathar - Moolavar Organization, Thiruvaranga Speciality, Srirangam History, Srirangam - Karna Paramparai Story, Srirangam Highlights, Srirangam News Mentioned by Alwar, Similar Structure, Similarities in Alwar's Pasurams, Cloud, Mountain, Sea, Color, Flower, Clothing, Plants, Animals*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# திருவரங்கச் சிறப்பும் உவமை அமைப்பும்

***முனைவர் வ.கோபாலகிருஷ்ணன்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் – 636005, தமிழ்நாடு, இந்தியா. பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்றது, சேலம், தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச் சுருக்கம்**

வைணவத் தலங்களில் முதன்மையான இடத்தில் வைத்துப்போற்றப்படுவது திருவரங்கமாகும். திருமாலின் கிடந்தகோலம் இங்கு சிறப்பாகக் காணப்படுகிறது. இத்தகைய திருமாலை பலரும் பல விதத்தில் போற்றி வழிபாடு செய்கின்றனர். குறிப்பாக வைணவப் பெரியோர்கள் என்று அழைக்கப்படுகின்ற திருமங்கையாழ்வார், குலசேகராழ்வார் போன்ற ஆழ்வார்கள் வரிசையில் தொண்டரடிப்பொடியாழ்வாரும் திருவரங்கப் பெருமானை வழிபட்டுள்ளனர். இவர்கள் தத்தமது பாசுரங்களில் திருவரங்கப் பெருமானை ஆங்காங்கே நினைத்தும் உருகியும் பாடியுள்ளனர். அவ்வாறு திருமாலை புகழ்ந்துபாடும்போது உவமையினைக் கொண்டு உணர்ச்சிப் பெருக்காக பாடியிருப்பதையும் காணலாம். இதுபோன்ற செய்திகளை அடுத்துவரும் சந்ததியினருக்கு எடுத்துரைக்கும் விதமாக திருவரங்கச் சிறப்பினையும் அமைப்பினையும் வரலாற்றுச் செய்திகளையும், தொண்டரடிப்பொடியாழ்வாரின் பாசுரங்களில் அறியப்படும் உவமைச் செய்திகளையும் பற்றி ஆராய்வதாக இவ்வியல் அமைகின்றது.

**திருவரங்கம்**

ஸ்ரீரங்கம் என்றழைக்கப்படுவதே திருவரங்கம் ஆகும். திருமாலின் திவ்ய தேசங்கள் 108. அவற்றில் முதன்மையானது ஸ்ரீரங்கமாகும். ஸ்ரீரங்கம் கோயில் என்ற பெயர் கொண்டது. பூலோக வைகுண்டம் எனப் போற்றப்படுகிறது. போக மண்டபம் எனவும் அழைப்பர். முதன் முதலில் இவ்வூர் நர்மரங்கம் என்ற பெயரில் இருந்தது. ஸ்ரீரங்கநாதன் எழுந்தருளிய பிறகு ஸ்ரீரங்கம் என ஆயிற்று. இத்தகைய சிறப்பு பெற்ற இத்தலம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அமைந்துள்ளது. சென்னையிலிருந்து சுமார் 330 கிலோமீட்டர் தெற்கேயும் மதுரையிலிருந்து சுமார் 130 கிலோமீட்டர் வடக்கேயும் கோவையிலிருந்து சுமார் 200 கிலோமீட்டர் கிழக்கேயுமாக அமைந்துள்ள இத்தலத்தை அடைவதற்கு இரயில் பேருந்து மற்றும் விமான வசதிகள் உள்ளன.

திருவரங்கத்தை மேயோன் திசை என்றும், அரங்கம் தென்னரங்கம், தேனார் திருவரங்கம் என்றும், மறைப் பெரும் தீவளர்த்திருப்பார் வருவிருந்தை அளித்திருப்பார் என்றும், சிறப்புடைய மறையவர்வாழ் திருவரங்கம், தேன் தொடுத்த மலர்ச்சோலை திருவரங்கம், செழிப்புடைய காவேரி வந்து அடிதொழும் சீர் அரங்கம் என்றும், நல்லார்கள் வாழும் நளிர் அரங்கம் என்றும் பெரியகோயில்,

மதில் திருவரங்கம் என்னும் அஞ்சிறைய வண்டுவாழ் பொழில் சூழ் அரங்கநகர் என்றும் நல் திருவரங்கம் என்றும் பலபடியாக ஆழ்வார்கள் பன்னிருவரும் போற்றிப் பாடியுள்ளனர்.

இத்தகைய சிறப்பினையுடைய திருவரங்கமானது "108 வைணவத் திருத்தலங்களில் ஒரு மகா விருட்சம் போன்றது. மகா விருட்சத்திற்கு வேர் போன்றது ஸ்ரீரங்கம். ஒரு விருட்சத்தின் வேரில் நீர் ஊற்றினால் அத்தண்ணீர் விருட்சம் பூராவும் பரவுதலைப்போல ஸ்ரீரங்கத்தை மட்டும் சேவித்தால் மற்ற 108 திவ்ய தேசங்களையும் சேவித்த பலன் கிட்டும் என்பது ஆன்றோர் வாக்கு."1 மேலும், இயற்கை நதிகளின் இடையே அமைந்த புனிதத் தீவு ஸ்ரீரங்கம். கர்நாடக மாநிலத்திலிருந்து வரும் காவிரியானது ஸ்ரீரங்கத்தின் மேற்கே மேலணையில் (முக்கொம்பு) இருகூறாகி, காவிரி கொள்ளிடம் எனப்பிரிந்து, ஸ்ரீரங்கநாதருக்கு அணிவிக்கின்ற மாலைப்போல் நதியானது பிரிந்து கிழக்கே கல்லணையில் ஒன்றாக இணைகிறது. இவ்வாறாக ஸ்ரீரங்கம் இயற்கையின் அமைப்பு படி அழகாக அமைந்திருப்பதையும் இவ்வியலின் வழி நாம் அறியலாம்.

**திருவரங்கநாதர் - மூலவர் அமைப்பு**

திருவரங்கத்தில் பள்ளிகொண்டிருக்கும் திருமால் அதாவது திருவரங்கநாதரின் மூலவர் அமைப்பை பன்னிரு ஆழ்வார்களில் தொண்டரடிப்பொடியாழ்வார் மட்டும் தன் பாசுரத்தில் குறிப்பிடுகிறார். இத்தகைய மூலவர் அமைப்பைப் பற்றி,

"குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கி
கடல்-நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலுமா கண்டு
உடல் எனக்கு உருகுமாலோ! என் செய்கேன் உலகத்தீரே!"2

எனக் குறிப்பிடுகிறார். அதாவது, இவ்வுலகில் உள்ளவர்களே கடல் போன்ற நிறத்தை உடைய சர்வேசுவரனான என் சுவாமி, மேற்குத் திக்கில் திருமுடியை வைத்தருளியும், கிழக்குத் திக்கில் திருவடிகளை நீட்டியும், வடக்குத் திக்கில் உள்ளவர்களுக்குத் தன் பின்னழகைக் காட்டியும், தெற்குத் திக்கில் இலங்கையப் பார்த்துக்கொண்டும் திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலே கண்வளர்ந்தருளும் அழகைக் கண்டு என் உடலானது உருகுகின்றது. என்று திருமாலின் அதாவது மூலவர் அமைப்பைப் பற்றி ஆழ்வார் தெளிவாக எடுத்தியம்புவதைக் காணலாம்.

மேலும், "ஸ்ரீரங்க நகரத்தின் நடு மையத்தில் இக்ஷவாகு குலதனமான ஸ்ரீரங்கப் பெருமாள், பிரணவாகார விமானத்தின் கீழ் படமெடுத்த ஆதிசேக்ஷன் படுக்கையில், அனந்தசயனத் திருக்கோலத்துடன், வலது கையை திருமுடியில் படும்படி வைத்த வண்ணமும், இடக்கையை திருவடி புறமாக வைத்த வண்ணமும் துயில் கொண்ட நிலையில் காட்சியளிக்கிறார். கீழே உற்சவமூர்த்தி, திருமகள் மண்மகளோடு காட்சித் தருகிறார். நாபிக்கமலத்தில் எப்போதும் இருக்கும் பிரம்ம தேவனும்

இல்லாமல், தனிமை விரும்பிய பெருமகனாகக் காட்சித்தருகிறார்."3 மேலும், "பிரணவாகார விமானத்தின் மீது பரவாசு தேவரின் திருமேனியைக் காணலாம். தங்கத்தகடுகளால் போர்த்தப்பட்ட விமானம் காண்போரை பக்தி பரவசமூட்டும் ரங்க மண்டபத்தை காயத்ரி மண்டபம் எனவும், விமான கலசங்களை காய்த்ரியின் தலைப் பகுதி எனவும், அந்த மண்டபத்தில் உள்ள 24 தூண்களை காயத்ரியின் 24 அட்சரங்கள் (எழுத்துக்கள்) எனவும் கூறுவார்கள்.

| | |
|---|---|
| மூலவர் | : ஸ்ரீரங்கநாதர் |
| உற்சவர் | : அழகிய மணவாளப்பெருமாள் |
| தாயார் | : ஸ்ரீரங்கநாச்சியார் |
| விமானம் | : பிரணவாகார விமானம் |
| ஸ்தல விருட்சம் | : வில்வம் |
| தீர்த்தம் | : சந்திர புக்ஷ்கரணி, சூரிய புக்ஷ்கரணி |

ஆகியவைகளாகும்."4 இதில் மூலவரையும், விமானத்தையும், தலவிருட்சத்தையும் காணலாம்.

**திருவரங்கச் சிறப்பு**

தாமாக வெளிப்பட்ட வைணவத் தலங்கள் எட்டு என்று கூறுவர். ஸ்ரீரங்கமும், ஸ்ரீரங்க விமானமும் தாமாகவே தோன்றியிருப்பதால் இத்தலம் தாமாகத் தோன்றியது என்று கூறுவர். இதில்,

1. ஸ்ரீரங்கம்
2. ஸ்ரீமுக்ஷ்ணம்
3. திருவேங்கடமாமலை
4. சாளக்ராம மலை
5. நைமிசாரண்யம்
6. தோதாத்ரி
7. புக்ஷ்கரேÑத்ரம்
8. பதரி

ஆகிய எட்டும் சுயம்புவாகத் தோன்றியதாகும். இதிலும் ஸ்ரீரங்கமே முதன்மையானத் தலமாக அமைந்துள்ளது. மேலும், இத்தலத்திற்கு எல்லாமே பெரியதாக ஏற்றிச் சொல்வது சிறப்புடையதாகும். அதாவது,

| | | |
|---|---|---|
| "திருவரங்கம் | - | பெரியகோயில் |
| பேரும் பெரியது | - | ஊரும் பெரியது |
| கோயிலுக்கு | - | பெரிய கோயில் |
| பெருமாளுக்கு | - | பெரிய பெருமாள் |

தாயாருக்கு - பெரிய பிராட்டியார்

ஊருக்கு - பேரரங்கம்

தளிகைக்கு - பெரிய அவசரம்

வாத்தியத்திற்கு- பெரிய மேளம்

பட்சணங்களுக்கு - பெரிய திருப்பணியாரங்கள்"5

என இத்தலத்திற்குக் கூறுகின்றனர்.

**ஸ்ரீரங்க வரலாறு**

ஸ்ரீராமனால் வணங்கப்பட்டவர் ஸ்ரீரங்கநாதப் பெருமாள். திரேதாயுகத்தில் இக்ஷ்வாகு வம்சத்து அரசர்களால் பிரம்ம தேவனிடம் பெற்று பூஜிக்கப்பட்டு வந்த ஸ்ரீரங்கவிமானம் ஸ்ரீராமபிரானால் விபீக்ஷணருக்குப் பரிசாக வழங்கப்பட்டது.

ஸ்ரீராமபிரானிடமிருந்து ஸ்ரீரங்க விமானம், பூஜா பாத்திரங்கள் ஆகியவற்றைப் பெற்றுக்கொண்ட விபீக்ஷணன் இலங்கை செல்லும் வழியில் காவிரி நதி தென்பட்டது. அப்போது நடுப்பகல் நேரமாதலால் அந்த நேரத்தில் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்துமுடிக்க எண்ணினான் விபிக்ஷணன். தலைமீது வைத்திருந்த ஸ்ரீரங்க விமானத்தை சந்திரபுக்ஷ்கரணியை அடுத்துள்ள அனந்த பீடத்தில் எழுந்தருளச் செய்துவிட்டு நித்திய கடன்களை முடித்து நம்பெருமாளுக்கு உச்சிகால பூஜையைச் செய்தான். நல்ல சுபவேளையில் அங்கு நிலை பெற்றான் இக்ஷ்வாகு குலதனமாக ஸ்ரீரங்கபெருமான்.

அப்போது அங்குவந்த முனிவர்களும், பக்தர்களும் ஸ்ரீரங்கநாதன் அங்கு எழுந்தருளியிருப்பதைக் கண்டு வணங்கி மகிழ்ந்தனர். அதே சமயத்தில் ஸ்ரீரங்கநாதர் அங்கு வந்த தர்மவர்மா என்கிற மன்னனும் மாந்தர் அனைவரும் பெருமையுடன் வணங்கும் பொருட்டு ஸ்ரீரங்க விமானம் இங்கேயே இருக்கட்டும் என வேண்டினார்கள்.

அதற்கு விபீக்ஷணன் நாளை பொழுது விடிந்ததும், முதல் பிரம்மோத்ஸவத்தை கொண்டாட வேண்டும். இங்கு தாமதிக்கமாட்டேன் எனக் கூறி புறப்பட ஆயத்தமானான். பிரம்மோத்ஸவத்தை இங்கேயே சிறப்பாக கொண்டாட நாங்கள் ஆவன செய்கின்றோம் என தர்மவர்மாவும் ஏனையோரும் சொன்னார்கள். தர்மவர்மா கூறியதைக் கேட்டு விபீக்ஷணன் சம்மதித்தான். பிரம்மோத்ஸவத்தை சிறப்பாக செய்துமுடித்தனர்.

அதன் பின்னர் இலங்கை செல்ல ஆயத்தமாகிய விபீக்ஷணன் ஸ்ரீரங்க விமானத்தை எடுக்க முயல அது அசையவே இல்லை. உடனே விபீக்ஷணன் ஸ்ரீரங்கநாதரிடமே தனக்கு நேர்ந்ததை வருத்தமுடன் சொல்ல ஸ்ரீரங்கநாதனும் அவனுக்கு கீழ்க்கண்டவாறு சமாதானங்களைக் கூறினார். தர்மவர்மாவிற்கு இங்குவந்து தங்குகிறேன் என முன்னரே வாக்கு தந்துவிட்டேன். கங்கை நதியைக்

காட்டிலும் காவிரி நதியை சிறப்புடையதாக்கவே இங்கு தங்குகிறேன் எனக் கூறி நான் இங்கேயே இருந்து உன் திசையான தெற்கு நோக்கிப் பார்த்துக்கொண்டு உன்னையும் காப்பேன். நீ கவலைப்படாமல் உன் நாடு ராஜ்ய பரிபாலனம் செய்வாயாக என்று கூறி அருள்பாலித்து விபீக்ஷணனை அனுப்பி வைத்தார் அரங்கநாதன்.

**ஸ்ரீரங்கம் - கர்ண பரம்பரை கதை**

ஸ்ரீரங்க வரலாற்றை ஸ்ரீரங்க கோயில் வரலாறு மூலம் அறிகின்றோம். இவ்வகையில் கர்ண பரம்பரை கதையும் உண்டு. "ஸ்ரீராமரின் பட்டாபிக்ஷேகத்தின்போது பரிசாகப் பெற்ற ஸ்ரீரங்க விமானத்துடன் விபூக்ஷணன் இலங்கைக்கு திரும்புகிறார். போகும் வழியில் காவிரி நதியை அடைந்த விபீக்ஷணன் காலைக்கடன்களை கழிக்க எண்ணினான். ஆனால் ஸ்ரீரங்க விமானத்தை கீழே இறக்கமனமின்றி தவித்தபோது அவன் எதிரே, ஸ்ரீரங்கநாதனை இங்கேயே எழுந்தருள செய்யும் எண்ணத்தோடு வினாயகர் ஒரு சிறுவனாக உருமாறி வருகிறார். சிறுவனைக் கண்ட விபீக்ஷணன் தான் காலைக்கடன்களை முடித்து வரும்வரையில் விமானத்தைக் கீழே வைத்துவிடாமல் தாங்கி நிற்குமாறு கேட்க, வினாயகரும் சம்மதித்து விமானத்தைப் பெறுகிறார்.

விபீக்ஷணன் சென்ற பிறகு விமானத்தைத் தரையில் வைத்துவிட்டு ஓட அதைக்கண்ட விபீக்ஷணன் அச்சிறுவனைத் துரத்த அச்சிறுவனான வினாயகர் அருகில் இருந்த திருசிரபுரம் மலை மீது ஏற சிறுவனாக வந்த வினாயகரின் தலையில் குட்டுகிறார். சிறுவன் வினாயகராக காட்சி தந்து ஸ்ரீரங்கநாதனை இங்கேயே எழுந்தருள வைக்கவே இத்திருவிளையாடல் என்று கூறுகிறார்."6 இவ்வாறாக ஸ்ரீரங்கநாதர் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியதாக கர்ண பரம்பரை கதையும் உண்டு.

இவ்வாறாக, "5000 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட இத்திருக்கோவில் பல்வேறு கால கட்டங்களில் சோழ, பாண்டிய, ஹொய்சால, விஜயநகர அரசர்கள் மற்றும் நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டும் அபிவிருத்தி செய்யப்பட்டு வந்தபோதிலும், முகலாய மன்னர்களான மாலிக்காபூர், முகமது பின் துக்ளக் போன்றோர்களால் கொள்ளை அடிக்கப்பட்டதால் பாதிக்கப்பட்டது. பதினைந்தாம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் சீரமைக்கப்பட்டது."7 என்ற வரலாறும் இக்கோயில் பின்னனியில் உண்டு.

**ஸ்ரீரங்கம் சிறப்பம்சங்கள்**

ஸ்ரீரங்கத்தின் கோவில் சிறப்பம்சங்கள் வியப்பிற்குரியதாக உள்ளது. கோயிலில் நுழைந்தவுடன் ரங்கவிலாச மண்டபம் அருகில் உள் ஆண்டாள் சன்னதி உள்ளது. மண்டபத்தில் மேலே சென்று அங்கிருந்து பார்த்தால் ஸ்ரீரங்கத்தில் உள்ள 21 கோபுரங்களும் தெரியும். கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பர். மேலும், அந்த இடத்தில் பார்த்தால் மூலவர் தங்க விமானம் தெரிவதே பரவசமாக இருக்கும்.

கீழே இறங்கி வந்தால் மாடிப்படியின் எதிரே வேணுகோபால ஸ்வாமி சன்னதியில் சிற்பங்கள் அற்புதமான கலை வேலைப்பாடுகளுடன் காணப்படும். வெட்கப்படும் பெண், கண்ணாடி பார்க்கும் பெண், திலகம் வைக்கும் பெண் போன்ற சிற்பங்களைக் காணலாம். கருட மண்டபத்தில் உள்ள கருடாழ்வார் விக்ரஹம் மிகப்பெரிய அளவும் சுதை வேலைப்பாடு கொண்டதாகவும் அமைந்துள்ளது. சற்றே மேற்குப் பக்கம் நம்மாழ்வார் சன்னிதியில் சுவற்றில் உள்ள ஓவியங்கள் அற்புதமானவை.

அதனருகே கீழே இறங்கினால் திருக்கொட்டாரம் எனப்படும் நெற்களஞ்சியம் உள்ளது. நெற்களஞ்சியங்கள் பிரம்மாண்டமானவை. அங்கு 16-ஆம் நூற்றாண்டில் வரையப்பட்ட ராமர் பட்டாபிக்ஷேக ஓவியம் அற்புதமானது. தாயார் சன்னிதியின் எதிரில் மேட்டழகிய சிங்கர் கோயில் உள்ளது. அந்த சன்னிதியில் படியேறி சென்று பார்த்தால் பழைய கால அற்புதமான வண்ண ஓவியங்களைக் காணலாம். ஆயிரங்கால் மண்டபத்தில் வரிசை வரிசையாக ஆயிரம் தூண்கள் ஒன்றையொன்று மறைக்காத வகையில் நேர் வரிசையில் அமைந்திருப்பது கலை நுணுக்கத்தின் அடையாளம். இதனை பின்னிணைப்பில் காணலாம். ஆயிரங்கால் மண்டபத்தின் எதிரில் சேசஷராயர் மண்டபத்தின் முகப்பில் குதிரை வீரன் சிலை உள்ள தூண்கள் வரிசையாக உள்ளது. ஒவ்வொரு தூணிலும் வேறுபட்ட சிற்பங்கள் அதிநுணுக்கத்துடன் செதுக்கியிருப்பது மனதை கொள்ளை கொள்ளும். மண்டபத்தின் உள்ளே தூண்களில் தசாவதார சிற்பங்களைக் காணலாம். அதன் சிற்பவேலைப்பாடுகள் நம்மைக்கவரும் வகையில் அமைந்துள்ளது.

புராதன கலைப்பொருட்கள், நாணயங்கள் செப்புப் பட்டயங்கள் இரும்பாலன வினோதமான பழங்காலப் பூட்டுகள், கலையழகு மிளிரும் நுன்னிய வேலைப்பாடுகளுடன் செதுக்கப்பட்ட தந்தத்தினால் செய்த பொருட்கள் பொம்மைகள்யாவும் தேவஸ்தான அலுவலகத்தின் எதிரில் உள்ள அருங்காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளன.

ஆசியாவிலேயே மிகப்பெரிய கோபுரம் எனப் புகழப்படும் ராஜகோபுரத்தின் (ராயகோபுரம்) உயரம் 236 அடி ஆகும். இதன் அகலம் 192 அடியாகும். அஹோபிலமடம் 44வது பட்டத்தில் இருந்த ஸ்ரீமத் அழகிய சிங்கர் ஸ்வாமிகளால் கட்டி முடிக்கப்பட்ட இந்த கோபுரத்தின் 13 நிலைகள் (அடுக்குகள்) உள்ளது. இதனையும் பற்றியும் மற்ற கோபுரத்தின் விவரங்களைப் பற்றியும் பின்னினைப்பில் காணலாம்.

இத்தகு சிறப்பு வாய்ந்த இடத்தை நாம் போற்றியும் ரசித்தும் காணவேண்டும். எனவே, “மனிதனுடைய மனத்தில் உணர்ச்சியை எழுப்பி அழகையும் இன்பத்தையும் அளிக்கிற பண்பு அழகுக் கலைகளுக்கு உண்டு. மனிதன் தன்னுடைய அறிவினாலும் மனோபாவத்தினாலும் கற்பனையினாலும் அழகுக் கலைகளை அமைத்து அவற்றின் மூலமாக உணர்ச்சியையும் அழகையும் இன்பத்தையும் காண்கிறோம். அழகுக் கலைகள் மனத்திலே உணர்ச்சியை எழுப்பி அழகுக்

காட்சியையும் இன்ப உணர்ச்சியையும் கொடுத்து மகிழ்விக்கிறபடியினாலே, நாகரிகம் படைத்த மக்கள் அழகுக் கலைகளைப் போற்றுகிறார்கள்; துய்த்து இன்புற்று மகிழ்கிறார்கள்."8 என்னும் மயிலை.சீனி.வேங்கடசாமியின் கருத்தையும் பொருத்திக் காணலாம்.

**ஆழ்வார் குறிப்பிடும் ஸ்ரீரங்கச் செய்திகள்**

தொண்டரடிப்பொடியாழ்வார் தன் திருமாலை திருப்பள்ளியெழுச்சி பாசுரங்களில் 'அரங்கமா நகருளானே!' என்று திருமாலையில் பதினோறு இடங்களில் சுட்டுகிறார். அதாவது அரங்கம் என்று சொல்லிப்படுகின்ற பெரிய நகரத்தில் குடிகொண்டிருப்பவன் என்பது பொருளாகிறது. அரங்கன் என்று பதினான்கு இடங்களிலும் திருவரங்கம் என்ற சொல்லானது ஆறு இடங்களிலும் அரங்கத்தம்மா என்று திருப்பள்ளியெழுச்சி முழுவதிலும் குறிப்பிடுகிறார். திருமால் உறைகின்ற இத்திருத்தலத்தை ஆழ்வாரே பெரியகோயில் என்றும், மதில்கள் சூழ்ந்த திருவரங்கம் என்று தன் பாசுரத்தில்,

"மருவிய பெரிய கோயில் மதில் திருவரங்கம் என்னா"9

எனக் கூறுகிறார். மதில் சூழ்ந்த இடமாகிய ஸ்ரீரங்கத்தைப் பற்றி பின்னிணைப்பிலும் காணலாம். மேலும், பரந்து விரிந்து பாய்கின்ற காவிரிக்கிடையே அமைந்திருக்கின்ற தலம் திருவரங்கம் என்பதனை,

"வெள்ளநீர் பரந்து பாயும் விரிபொழில் அரங்கந் தன்னுள்"10

என்றும்,

"கங்கையிற் புனிதம் ஆய காவிரி நடுவுபாட்டுப்
பொங்குநீர் பரந்து பாயும் பூம்பொழில் அரங்கந் தன்னுள்"11

மேலும், காவிரி நீர் சூழ்ந்த இடம் திருவரங்கம் என்பதை,

"சூழ் புனல் அரங்கத்தானே"12

அதே போல,

"சூழ் புனல் அரங்கா"13

எனக் குறிப்பிடுவதன் மூலம் நாம் அறியலாம்.

இவ்வாறாக தொண்டரடிப்பொடியாழ்வார் தன் திருமாலை திருப்பள்ளியெழுச்சியில் ஸ்ரீரங்கத்தைப் பற்றி அதாவது திருவரங்கத்தைப் பற்றி தெளிவாகக் குறிப்பிடுவதை அறிகின்றோம். மதில்கள் சூழ்ந்த திருவரங்கம் என்று குறிப்பிடும்போது ஸ்ரீரங்கம் கோவிலைச் சுற்றி ஏழு பிரகாரங்களும் 156 ஏக்கர் பரப்பளவும் உள்ளது. அதைச் சுற்றி 51 கோயில்களும் 22 கோபுரங்களும் உள்ளன. 108 மண்டபங்களும் ஏழு மதில் சுற்றும் ஏழு உலகங்களைக் குறிக்கின்றது. இதனை,

"1.பூலோகம் - மாடங்கள் சூழ்ந்துள்ள சுற்று
2.புவர்லோகம் - திரிவிக்ரம சோழன் சுற்று
3.ஸீவர்லோகம் - அகளங்கனென்னும் கிளிச்சோழன் சுற்று
4.மஹர்லோகம் - திருமங்கை மன்னன் சுற்று
5.ஜநோலோகம் - குலசேகரன் சுற்று
6.தபோலோகம் - ராஜமஹேந்திரசோழன் சுற்று
7.ஸத்யலோகம் - தர்மவர்மசோழ மன்னன் சுற்று"14

இவ்வாறாக ஏழு மதில் சுவர்கள் உள்ளன. இனி பாசுரங்களில் உள்ள உவமை பகுதிகளைக் காணலாம்.

**உவமை அமைப்பு**

புலவரின் கருத்து நயத்தையும், கற்பனை நயத்தையும் அணி செய்ய வருவதே உவமையாகும். தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் உவமவியல் என்னும் இயலை வகுத்து உவமை குறித்து விளக்கமாக எடுத்துரைப்பதைக் காணமுடிகிறது. இத்தகைய உவமைத் தன்மையினைப் பற்றி, "தெரியாத ஒன்றை, தெளிந்த ஒன்றைக் கொண்டு அறிகிறோம். கவிதையில் இடம் பெறும் உவமைகள் கற்போருக்கு வழி பேரின்பம் நல்குகின்றன. அச்சானி இல்லாத தேர் முச்சாலும் ஓடாது என்பது பழமொழி. அவ்வுணர்த்தும் திறன் உவமையால் சிறப்பும் மேன்மையும் பெறுகின்றன. தொடக்கத்தில் பொருள் புலப்பாட்டிற்கென அமைந்த உவமை நாளடைவில் அலங்காரமாகி கேட்போர்க்கு இன்பம் பயக்கவும் தொடங்கின. மனிதனின் தெளிந்த அறிவில் விளைந்த மொழிக்கு உறுதுணை பயக்கும் உவமைகள், உணர்வூட்டி உள்ளதை மகிழ்விக்கும் இலக்கியத்திற்கு அணி செய்யவும் தொடங்கின. உள்ளத்து உணர்ச்சிகளை பட்டாங்கு மொழிந்தால் போதுமே என்ற எண்ணம் கூட எழலாம். கருத்துக்கும் உணர்ச்சிக்கும் உருவம் கொடுக்கும் கலையைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெற்றுவிட்டோம்."15 என்ற கருத்தைக் காணும் போது தன் கருத்து முழுவடிவம் பெற வேண்டும் என்றால் உவமை அவசியம் என்பதை அனைவரும் அறிந்திருக்கின்றனர்;. அவ்வகையில் தொண்டரடிப்பொடியாழ்வாரின் பாசுரங்களும் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. இதைப் பற்றி இனிவரும் பகுதிகளில் அறியலாம்.

**ஆழ்வார் பாசுரங்களில் உவமைகள்**

தொண்டரடிப்பொடியாழ்வாரின் பாசுரங்களில் உவமை அமைப்பு சிறப்பாகக் காணப்படுகிறது. குறிப்பாக, திருமாலையில் உவமை அமைப்புக் காணப்படுவது போல் திருப்பள்ளியெழுச்சியில் காணப்படுவதில்லை. ஏனெனில் அதில் பாசுரங்கள் குறைவு. பெருமாளை எழுப்புவது போல் இருப்பதால் வர்ணனைகள் மிகுந்துள்ளன. எனவே தான் உவமை அமைப்பு குறைவாக உள்ளது.

**திருமாலையில் உவமை**

திருமாலையில் மேகம், மலை, கடல், நிறம், மலர், அணிகலன்கள், தாவரவினங்கள், உயிரினங்கள் ஆகியவைகளை உவமைகளாகக் கொண்டு ஆழ்வார் பாசுரத்தைப் பாடியுள்ளார். ஆனால் திருப்பள்ளியெழுச்சியில் வர்ணனையானது ஆறு பாடல்களில் மட்டும் காணமுடிகிறது.

**மேகம்**

மேகத்தைச் சுட்டுவமதாக,

"கொண்டல் மீது அணவும் சோலை"16

என்பதில் கொண்டல் என்பது மேகத்தைக் குறிப்பதாகவும்,

"காரொளி வண்ணனே! என் கண்ணனே!"17

என்ற பாடலடியில் கார் என்பதும் மேகத்தைச் சுட்டுவதோடு,

"கார்த்திரள் அனைய மேனிக் கண்ணனே!"18

என்பதும் மேற்கண்ட பொருளோடு பொருந்தி அமைவதை இதன் மூலம் அறிகின்றோம். எனவே கொண்டல், காரொளி, கார்த்திரள் என்னும் சொற்கள் மேகத்திற்கு உவமைப்படுத்தியுள்ளதை திருமாலை பாசுரங்கள் வழி அறிகின்றோம்.

**மலை**

மலை என்னும் இயற்கை பொருளை உவமைப்படுத்துவதாக நான்கு பாசுரங்கள் இடம் பெறுகிறது. இதனை,

"பச்சை மா மலைபோல் மேனி"19

என்ற ஆழ்வாரின் புகழ்ப் பெற்ற பாசுரத்தில் பெரிய மலை என்று உவமை உள்ளதையும்,

"அருவரை அனைய கோயில்"20

என்ற அடிகளில் அருவரை என்பது மேரு மலையைக் குறிப்பதாகவும் மேருமலையைப் போன்று இருக்கக்கூடிய திருவரங்கக்கோயில் எனப் பாடுவதையும் பாசுரத்தில் அறிகின்றோம்.

**கடல்**

கடல் என்னும் இயற்கை பொருளை உவமைப்படுத்துவதாக இரண்டு பாசுரங்களில் பயின்று வருவதை,

"இனி திரைத் திவலைமோத எறியும் தண்பரவை மீதே"21

என்பதில் வரவை எனும் சொல்லில் கடல் இடம்பெறுவதையும்,

"நம்பீ! கடல்வண்ணா! கதறுகின்றேன்"22

என்னும் பாசுரத்தில் கடல் என்னும் சொல் வெளிப்படையாக அமைவதையும் திருமாலையில் காண்கிறோம். ஆகவே கடல் என்னும் சொல்லையும் அதற்கு மற்றொரு சொல்லான பரவை என்பதையும் ஆழ்வார் தன் பாசுரத்தில் கூறியிருப்பதன் மூலம் அறிகின்றோம்.

**நிறம்**

நிறத்தை உணர்த்திக் காட்டுவதாக திருமாலை பாசுரத்தில் ஒரு பாசுரம் அமைந்துள்ளது. அப்பாசுரத்தில்,

"பச்சை மா மலைபோல் மேனி"23

என இடம்பெற்றுள்ளதைக் காணும்போது பசுமை நிறத்தில் உள்ள பெரிய மலைப்போன்ற மேனியை உடையவன் திருமால் என்ற பாசுரத்தின் மூலம் நிறத்தை உவமையாகக் கொண்டிருப்பதை அறிகிறோம்.

**மலர்**

திருமாலை பாசுரங்களில் உவமைக்கு மலை, மேகம், கடல் போன்றவற்றைப் பயன்படுத்தியிருப்பதன் மூலம் மலரையும் உவமையாகப் பயன்படுத்தியிருப்பதையும் காணமுடிகிறது. இதனை,

"…….கமலச் செங்கண்"24

என்று கமலம் என்றழைக்கப்படும் தாமரை மலர் போன்ற திருக்கண்களை உடையவன் திருமால் என்பதையும்,

"தூய தாமரைக் கண்களும்"25

என்ற பாசுரமும் மேற்கண்ட உவமையே உணர்த்தி நிற்கிறது. மேலும்,

"………கமல நன் முகமும் கண்டு"26

என்ற அடிகள் தாமரை மலர் போன்ற அழகிய திருமுகம் திருமாலுக்கு உண்டு என்பதையும்,

"……….தாமரைக் கண்ணன் எம்மான்"27

என்ற அடியினைக் காணும்போது திருமாலின் முகத்திற்கும் கண்ணிற்கும் தாமரைமலர் மட்டுமே உவமையாகப் பாடப்பட்டிருப்பதை நான்கு பாசரங்களின் மூலம் நாம் காணலாம்.

**அணிகலன்கள்**

உவமைப் பொருளுக்கு அணிகலன்களையும் ஆழ்வார் சுட்டிக்காட்டுவதை பாசுரங்களின் மூலம் அறியலாம். அதாவது,

"பவளவாய்……."28

எனக் குறிப்பிடுவதன் மூலம் திருமாலின் திருவாயானது பவளம் போன்று இருப்பதாக உருவகப்படுத்தி ஆழ்வார் பாடுவதையும் இங்கு காணலாம். மேலும், இதே உவமை உருவகத்தை மற்றொரு பாசுரத்திலும் நாம் காண்கிறோம். இதைக்குறித்து,

"……இதழ் பவள வாயும்"29

என்ற பாசுர அடிகளையும் இங்கு பொருத்திக்காணலாம்.

**தாவரவினங்கள்**

தாவரவினங்களையும் உவமையாகக் கொண்டுள்ள பாசுரங்கள் திருமாலையில் இடம் பெற்றுள்ளன. இத்தகைய உவமைக்குறித்து இரண்டு பாசுரங்களில் கூறப்படுகின்றன. அதாவது கரும்பு மற்றும் கொவ்வைக்கனி ஆகிய இரண்டும் உவமையாகப் பயின்று வந்துள்ளது. இதனை,

"கரும்பினைக் கண்டு கொண்டு, என் கண்ணினை களிக்குமாறே"30

என்ற அடியில் கரும்பு போன்ற இனிமையான குணத்தைப் பெற்றவர் திருமால் என்றும்,

"கனி இருந்தனைய செவ்வாய்க் கண்ணனைக் கண்ட கண்கள்"31

என்னும் அடியில் கொவ்வைக்கனி போன்ற சிவந்த திருவதரங்களைக் கொண்ட கண்ணபிரான் என ஆழ்வார் கரும்பு, கொவ்வைக்கனி போன்றவற்றையும் உவமைப்படுத்தியுள்ளதையும் இவ்வியலின் மூலம் அறிகின்றோம்.

**உயிரினங்கள்**

உயிரினங்களை உவமையாகக் கொண்டுள்ள பாசுரங்களும் உள்ளன. இவற்றில் வண்டினைக் குறிப்பதாக,

"வண்டினம் முரலும் சோலை மயிலினம் ஆலும் சோலை
……………குயிலினம் கூவும் சோலை"32
"சுரும்பு அமர் சோலை சூழ்ந்த அரங்கமா கோயில்"33

என்னும் பாசுரமும், மீன் போன்ற கண் என்பதை,

"மாதரார் இயற்கண் என்னும் வலையுள் பட்டு"34

என்ற பாசுரம் உணர்த்துவதன் மூலம் உயிரினங்களின் உவமைகளை ஆழ்வாரின் பாசுரங்கள் எடுத்துரைப்பதை இதன் மூலம் அறியமுடிகிறது.

திருவரங்கச் சிறப்பும் உவமை அமைப்பும் என்னும் இவ்வியலின் மூலம் திருவரங்கம் என்று அழைக்கப்படும் ஸ்ரீரங்கத்தின் சிறப்பும் பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளது. திருவரங்கம் என்னும் சொல்லை ஆழ்வார்கள் பயன்படுத்தியிருக்கின்ற விதம், திருவரங்க மூலவர் அமைப்பு, ஸ்ரீரங்க வரலாறு, கர்ண பரம்பரை கதை, தொண்டரடிப்பொடியாழ்வார் திருவரங்கத்தைப் பற்றி தன்னுடைய

பாசுரங்களில் கூறியிருக்கின்ற விதம், திருமாலை திருப்பள்ளியெழுச்சியில் உவமை கையாளப்பட்டுள்ள விதம் ஆகியவற்றைப் பற்றி இதில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**நிறைவுரை**

ஸ்ரீரங்கம் என்றழைக்கப்படுவதே திருவரங்கம் ஆகும். திருமாலின் திவ்ய தேசங்கள் 108. அவற்றில் முதன்மையானது ஸ்ரீரங்கமாகும். ஸ்ரீரங்கம் கோயில் என்ற பெயர் கொண்டது. பூலோக வைகுண்டம் எனப் போற்றப்படுகிறது. போக மண்டபம் எனவும் அழைப்பர். முதன் முதலில் இவ்வூர் நர்மரங்கம் என்ற பெயரில் இருந்தது. ஸ்ரீரங்கநாதன் எழுந்தருளிய பிறகு ஸ்ரீரங்கம் என ஆயிற்று. இத்தகைய சிறப்பு பெற்ற இத்தலம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அமைந்துள்ளது. ஸ்ரீரங்க மூலவர் மேற்குத் திக்கில் திருமுடியை வைத்தருளியும், கிழக்குத் திக்கில் திருவடிகளை நீட்டியும், வடக்குத் திக்கில் உள்ளவர்களுக்குத் தன் பின்னழகைக் காட்டியவாறு அமைந்துள்ளார். இதனை தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலை பாசுரத்தில் தெளிவாகப்பாடியுள்ளார்.

ஸ்ரீராமனால் வணங்கப்பட்டவர் ஸ்ரீரங்கநாதப் பெருமாள். திரேதாயுகத்தில் இக்ஷ்வாகு வம்சத்து அரசர்களால் பிரமம் தேவனிடம் பெற்று பூஜிக்கப்பட்டு வந்த ஸ்ரீரங்கவிமானம் ஸ்ரீராமபிரானால் விபீக்ஷணருக்குப் பரிசாக வழங்கப்பட்டது என்றும், திருச்சி மலைக்கோட்டை விநாயகர் ரங்கநாதனை காவிரி கரையில் இருக்கச் செய்தார் என்ற கர்ண பரம்பரை கதையும் உள்ளதை இயலின் மூலம் அறிகின்றோம். திருவரங்கக் கோவிலில் ராஜகோபுரம், ரங்கவிலாச மண்டபம், ஆண்டாள் சன்னதி, வேணுகோபால சன்னதி, கருடாழ்வார் சன்னதி, நம்மாழ்வார் சன்னதி, நெற்களஞ்சியம் ஆகியவைகளையும் அச்சன்னதிகளில் உள்ள சிற்பங்களையும் ஓவியங்களையும் பார்த்து ரசிக்கக்கூடியதாக உள்ளது. மேலும், தாயார் சன்னதி, கம்பர் இராமாயணம் அரங்கேற்றிய இடம், ஆயிரங்கால் மண்டபம், குதிரைவீரன் சிலை, தசாவதார சிற்பங்கள், தேவஸ்தான அருங்காட்சியகம் ஆகியவற்றைப் பார்க்கவேண்டிய இடங்களாக திருவரங்கத்தில் உள்ளதை அறிகிறோம்.

தொண்டரடிப்பொடியாழ்வார் தன் திருமாலை திருப்பள்ளியெழுச்சி பாசுரங்களில் அரங்கமா நகருளானே! என்று திருமாலையில் பதினோறு இடங்களில் சுட்டுகிறார். அரங்கம் என்று பதினொன்று இடங்களிலும், திருவரங்கம் என்ற சொல்லை ஆறு இடங்களிலும், அரங்கத்தம்மா என்னும் சொல்லை திருப்பள்ளியெழுச்சி முழுவதிலும் குறிப்பிடுகிறார். திருமாலையில் மலை, கடல், நிறம், மலர், அணிகலன்கள், தாவரவினங்கள், உயிரினங்கள் ஆகியவைகளை உவமைகளாகக் கொண்டு ஆழ்வார் பாசுரத்தைப் பாடியுள்ளார். ஆனால் திருப்பள்ளியெழுச்சியில் வர்ணனை அதிகமாக அமைந்துள்ளது. மேகத்தை உவமையாகக் குறிப்பிடும்போது கொண்டல், காரொளி, கார்த்திரள் என்னும் சொற்களை உவமைப்படுத்தியிருப்பதை திருமாலை பாசுரத்தில் அறியலாம்.

மலைக்கு அருவரை என்றும், கடலை பரவை என்றும் பாசுரத்தில் உவமைப்படுத்துகிறார் ஆழ்வார். நிறத்தை உவமையாகக் கூறும் போது பச்சை, கருமை ஆகியவற்றையும், அணிகலன்களில் பவளத்தையும், மலர்களில் தாமரையும், தாவரங்களில் கரும்பையும், கோவைக்கனியையும், உயிரினங்களில் வண்டு, மயில், குயில், மீன் ஆகியவற்றையும் ஆழ்வார் தன் பாசுரங்களில் உவமையாகக் குறிப்பிட்டுள்ளார்.

***சான்றெண் விளக்கம்***

**துணைநூல் பட்டியல் (Works Cited List)**


- **மோகன், இரா. (Mohan, Ira).** ***The Fourth Volume of the Study Guide-2014*. 2014,** பக். **1542.**
- **திருமலை. [**நூலின் பெயர் குறிப்பிடப்படவில்லை]***,** பக்கங்கள். **873-909.**
- **திருப்பள்ளி. [**நூலின் பெயர் குறிப்பிடப்படவில்லை]***,** பக். **926.**
- **வாசவி. (Vasavi).** ***History of Srirangam Temple*,** பக்கங்கள். **1-4.**
- **விஜயாலம், ஜ. (Vijayalam, J).** ***The Glory of the Arangan and the Glory of the Azhwars*,** பக்கங்கள். **8-90.**
- **வேங்கடசாமி, மயிலை சீனி. (Venkatasamy, Mayilai Sini).** *தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்* ***(The Arts of Beauty Cultivated by Tamils)*,** பக். **2.**


## References:


[1.] **Mohan, Ira.** *The Fourth Volume of the Study Guide-2014*. 2014, p. 1542.

[2.] **Thirumalai.** [Title of Work Missing]*, pp. 873-909.

[3.] **Thiruppalli.** [Title of Work Missing]*, p. 926.

[4.] **Vasavi.** *History of Srirangam Temple*, pp. 1-4.

[5.] **Venkatasamy, Mayilai Sini.** *The Arts of Beauty Cultivated by Tamils*, p. 2.

[6.] **Vijayalam, J.** *The Glory of the Arangan and the Glory of the Azhwars*, pp. 8-90.